தள மகாநாட்டில் ஆராயப்பட்டது. வெளியீடு: தள செயற்குழு.

## அராஜகவாதம் என்றால் என்ன?

சிறு முதலாளித்துவப்புரட்சி என்பது அராஜகவாதமாகும். (

). இது புறநிலை யதார்த்த இயங்கியல் விதிகளை நீண்டகாலக்கண்ணோட்டத்துடன் பிரச்சினைகளை அணுகும் சிந்தனைப்போக்கை நிராகரிக்கின்றது. பதிலாக அகநிலை சார்ந்த அதாவது சொந்த விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் பிரச்சினைகளை ஆராய்கின்ற பிரச்சினைகளின் உடனடித்தன்மைகளை மட்டும் பார்த்து தீர்வு காண முற்படும் சிந்தனைப்போக்காகும்.

எமது தேசிய விடுதலைப்போராட்டத்தின் வீழ்ச்சிக்கும் குழறுபடிகளுக்கும்-மூலகாரணமாக இந்த அராஜகவாதக் கண்ணோட்டம் நிலவுகின்றது.

(1) பரந்துபட்ட மக்களை அணிதிரட்டி தலைமை தாங்கும் கட்சி.

(2) உளப்பூர்வமான ஐக்கிய முன்னணி.

(3) உருக்குக்கட்டுப்பாடுடைய மக்கள் இராணுவம்.

இம்மூன்றையும் கட்டி எழுப்புவதில் புரட்சிகரசக்திகளின் முன்னால் உள்ள மிகப்பெரும் -தடைக்கல் அராஜகவாதமேயாகும். அராஜகம் என்ற சிந்தனைமுறையை அடியோடு தூக்கி எறிவதற்குப்பதிலாக சிந்தனைமுறையால் விளைந்த அனுபவங்களுக்கு எதிராக மட்டும் கற்களை வாரி வீசுவது வெற்றியைத்தராது.

### (அ) அராஜகவாதத்தின் வெளிப்பாடுகள்:

(1) தமிழீழ மக்களையும் தமிழீழ மண்ணையும் தளமாகக்கொண்டு சர்வதேச அரசியல், இராணுவ முரன்பாட்டம்சங்களைகொண்டு தயாரிக்கப்பட்ட விஞ்ஞான பூர்வமான வேலைதிட்டம் இன்மை. பதிலாக சர்வதேச அரசியல், இராணுவ முரன்பாட்டம்சங்களை தளமாக கொண்டே வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

(2) அரசியல் இராணுவ வேலைத்திட்டங்களில் கூட்டுச்சிந்தனையை மறுப்பது. பதிலாக தாபனத்தின் பிரதான தலைகள் சர்வதேச முதலாளித்துவ ராஜதந்திரிகளின் இரவல் மூளைக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

(ஆ) இதன்விளைவாக தோழர்களிடையேயும் மக்களிடையேயும் அரசியல் முடிவுகளைத் -திணித்தல். அரசியல் விவகாரங்களை வெறும் சிசு சிசு விவகாரங்களாகத் தாழ்த்துதல்.

(இ) தாபன வடிவமைப்பு இல்லாத அதற்கு அப்பாற்பட்டமுறையில் அரசியல் விவகாரங்களை நடத்தல்.

(ஈ) அரசியல் ரீதியில் தனிநபர் மேலாண்மையைத்திணித்தல்.

(3) [illegible] போராட்டம் இவற்றை நிராகரித்தல். உட்கட்சிப்போராட்டத்தின் இயங்கியல் தன்மையை புரிந்து கொள்ளாதுஉட்கட்சிப்போராட்டத்தை தாபனத்தை உடைக்கும் செயலெனக்கருதி பதிற்செயற்பாடுகளில் ஈடுபடல்.

அதாவது உட்கட்சிப்போராட்டத்தில் முன்வைக்கும் கருத்துக்களைப்பற்றி, தவறான செய்திகளைப்பரப்புதல், கொச்சைப்படுத்தல், உட்கட்சிப்போராட்டத்தில் சம்பந்தப்பட்ட தோழர்களைப் பற்றி அவதூறுகளைப்பரப்பல் போன்றவையாகும்.

(4) (அ) ஏற்கனவே இருக்கக்கூடிய தாபன ஒழுங்கமைப்பை மீறுதல். துஸ்பிரயோகம் செய்தல்.

(ஆ) [illegible] விளையாட முற்படல்.



www.tamilarangam.net
தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(5) தாபனமோ அல்லது தோழர்களோ தம்மைப்பற்றிய மிகை மதிப்பீட்டை உருவாக்கி அரசியல் வியாபாரம் செய்தல். உதாரணமாக தென்னிலங்கைத்தொடர்பைப் பெரிதுபடுத்தி காட்டல், எம்மிடம் அதிகளவு பயிற்சிபெற்ற ஆட்களும், ஆயுதங்களும் நவீன போர் சாதனங்களும் உண்டென போலிப்பிரச்சாரத்தில் ஈடுபடல். வேலைத்திட்டங்கள் இன்றி அறிக்கைகள் வெளியிடல்.

(6) தாபனத்தில் அதிகாரம் உள்ள நபர்கள் மொத்த தாபனத்திற்கு தெரியாமல் தமக்கென சில பிரத்தியேக அமைப்புக்களை நிறுவுதல்.
உதாரணம். உளவுத்துறை. இதில் சில நபர்கள் தமக்கெதிராக யாராவது தோழர்கள் ஏதாவது செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்களா என்பதை அறியவே செயற்பட்டுள்ளது.

(7) அரசியல் விவகாரங்களை தமது சொந்த விருப்பு வெறுப்பு விவகாரங்களாக கருதி ஏனைய தோழர்களை உதாசீனம் செய்தல்.

(8) அரசியல் ரீதியாக வளர்ந்த தோழர்களின் கருத்துக்கள் அவர்கள் அதிகார அங்கத்தில் இல்லாத காரணத்தால் உதாசீனம் செய்தல்.

(9) விஞ்ஞான பூர்வமாக ஒரு விடயத்தை ஆராய்வதற்குப்பதில் பலருக்கும் ... வேண்டிய விடயங்களை இடையில் குறிப்பிட்டு விதண்டாவாதச்செயற்கையைக்காட்டுதல்,

(10) தாபனமோ, தோழர்களோ ஏனையவர்களின் கருத்தைத் திருடி தமதென வெளிப்படுத்துதல்.

தாம் வகித்த பங்கை மிகைப்படுத்தி உரிமை பாராட்டல், நாம் செய்யாததை செய்ததாக உரிமை பாராட்டல்.

(11) வாதத்திறமையால் தோழர்களை அடித்து வீழ்த்தி பிழைகளை நியாயப்படுத்தல்.

(12) வர்க்க அடிப்படையிலும் கருத்துவ ரீதியாகவும் பிரச்சினைகளை அணுகும் போது ஆளும் வர்க்கக் கருத்துருவங்களின் அடிப்படையில் பிரச்சினைகளைப் பார்ப்பதும் அதை நியாயப்படுத்துவதும்.

உதாரணமாக முஸ்லீம், மலையக மக்கள் பிரச்சினையில் அல்லது வர்க்கப்பிரச்சினையில் மேலாதிக்க உணர்வுடன் விடயங்களைத் தர்க்கித்தல்.

(13) அராஜக வாதம் என்ற தத்துவப்போக்கிற்கு எதிரான உட்கட்சிப் போராட்டத்தை ஒரு சில அராஜக வாதிகளுக்கெதிரான பிரச்சினையாக மாற்றுதல். இதனால் மேலும் பல அராஜக வாதிகள் உட்கட்சிப்போராட்டம் என்ற திரைக்குள் மறைந்து விடுகின்றனர்.

(14) உட்கட்சிப்போராட்டத்தை தாழ்ந்த மட்டத்திற்கு (கருத்து ரீதியாக இல்லாமல் சம்பவங்களை முதன்மைப்படுத்தி கதைத்து) இழுத்துச்சென்று தோழர்களின் மனங்களை சோர்வடையச்செய்தல்.

(15) தாபனத்தில் ஒரு அங்கம் இன்னொரு அங்கத்தின் மீது ஆதிக்கம் செலுத்துதல். அதன் முக்கியத்துவத்தை மதியாத போக்கு.

(16) உட்கட்சி ஜனநாயகமின்மை.

(17) ஒழுங்கமைக்கப்படாத இராணுவக் கட்டமைப்பு.

(18) உட்கட்சிப்போராட்டத்தின் விளைவுகளையும் உட்கட்சிப்போராட்டத்தில் ஈடுபடும் சக்திகளையும் அதிகாரத்தில் உள்ள நபர்கள் தமது குழு நலன்களுக்கு பாவிக்க முற்படல். போன்றவையாகும்.

(19) ஐக்கியத்தைப்பற்றி பொய்வாய் அலட்டிக்கொண்டதேயொழிய ஏனைய தாபனங்களுடன் ஐக்கிய முயற்சிகளை நட்டிக்கழித்தமை.

(20) ஐக்கியம் தொடர்பாக பழைய அங்கங்களின் கருத்துக்களை கவனத்திற்கொள்ளாமல் செயற்பட்டமை.

(21) தேசிய விடுதலைப்போராட்டக் களத்தில் உழைக்கும் மக்கள் முகங்கொடுக்கும் சமூக வர்க்க அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாக்களிக்கி..

................ அடுக்கும் வர்க்கத்திற்கு அல்லது அவ்வர்க்கத்தைச்சேர்ந்த தனி நபருக்கு சார்பாக நடந்து கொண்டமை.

(22) ஏனைய தாபனங்களின் அராஜுவச்செயற்பாடுகளின்மேல் கண்மூடித்தனமான செறுபூசியமை.

(23) இய்க்க வெறியை வளர்த்தல்.

(24) எமது தாபனத்தைவிட்டு வெளியேறிய தோழர்களின் விமர்சனங்களை - தாபனத்துள் மறைத்து அவர்களை கொலைசெய்தமை, ஆயுத நடவடிக்கை எடுக்க முற்பட்டமை.

(25) மக்களை ஆயுதபாணிகளாக்குதல் செய்வதைவிட்டு மக்களிடமுள்ள - ஆயுதங்களைப்பறித்து (சொட்கன்) அவர்களை நிராயுதபாணிகளாக்கியமை.

(26) அனைத்து விடயங்களையும் மார்க்சிச-லெனினிச மனோவியல்களைக் - கொண்டு அணுகுவதற்குப்பதிலாக வெறும் முதலாளித்துவ ராஜதந்திர மனோநிலையின்பாற்பட்டு அணுகியமை.

(27) தாபனத்திற்கென சரியான சொந்தக்காலில் நிற்கக்கூடிய பொருளாதாரத்திட்டமின்மை. இதன்விளைவால் பல பாதகமான தவறான அரசியல் விளைவுகளை கொண்டுவரக்கூடிய சமூக விரோத வழிகளில் பணம் திரட்டும் முயற்சிகளில் ஈடுபட்டமை.

(28) (அ) எமது தாபனத்துள் இருந்த புத்திஜீவிகள் அழிக்கப்பட்டமை. வெளியேறியமை. தாபனத்திற்கு வெளியில்உள்ள புத்திஜீவிகளின் தொடர்பை துண்டித்துக்கொண்டமை.

## (ஆ) இராணுவ ரீதியில்.

(1) தாபனத்துள் ஏற்படும் கருத்து முரண்பாடுகளை ஆயுதபலாத்காரத்தால் பயமுறுத்தல், சித்திரவதை செய்தல், கொலைசெய்தல்.

(2) ஏனைய தாபனங்களில் ஏற்படும் கருத்து முரன்பாடுகளைப்பேசி தீர்ப்பதற்குப்பதிலாக ஆயுதத்தால் தீர்க்க முற்படல்.

(3) தாபனத்திற்குள்ளான ஐக்கியத்தைசாவுவதன்மூலமே உருவாக்கமுடியும் என்றவகையில் பிரச்சாரம் செய்தல்.

(4) இராணுவ அமைப்பு என்பது ஏனைய அங்கங்களுக்கு அப்பாற்பட்ட விவகாரங்களாக காட்டுவது.

உதாரணமாக ஏதாவதொரு கமிட்டியைச்சேர்ந்த இராணுவத்தோழர்கள் அக்கமிட்டிக்கூட்டங்களுக்கு வரத்தேவையில்லை; நிதிக்கணக்குவழக்குக்காட்டத்தேவையில்லை என்பது போன்றபோக்கு.

(5) இராணுவத்திற்கு அரசியல் தேவையில்லை என்று அடித்து மறுத்தல்.

(6) எந்த ஆதாரமுமின்றி மரணதண்டனை வழங்கல்.

(7) சந்தேகப்படும் ஒருவரை சித்திரவதைகளைச்செய்துவிட்டு பின்னர் அவர் நிரபராதி எனத்தெரிந்ததும் அவர் சித்திரவதைகள்பற்றி வெளியே சொல்லிவிடுவார் என்றுகாரணத்தால் கொலைசெய்தல்.

(8) மரணதண்டனை விதிக்கப்பட்டபின் அளவுக்கதிகமான சித்திரவதைகளில்நாட்டம்.

(9) தனிப்பட்டநபர்மீதுள்ள விசுவாசத்தைமட்டும் அடிப்படையாகக்கொண்டு மரண தண்டனைகளை நிறைவேற்றல்.

(10) கைதுசெய்யப்பட்டு இருப்பவர் பெண்ணாயின் பாலியல் சித்திரவதைகளில் நாட்டம்.

(11) காத்திருந்து பழிவாங்குதல்.

(12) மக்களை மதிக்காதது மட்டுமல்ல தம்மை அவர்களைவிட மேலானவர்களாகக்காட்டிக் கொள்ளும் கதாநாயகர்களின்போக்கு.

(13) தாபனச்சொத்துக்களை தமது சொந்தச்சொத்துக்களைப்போல் பாவித்தல்.

(14) வேலைத்திட்டமில்லாத, கொள்கையில்லாத, தன்னிச்சையான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடல்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(15) யாராவது தோழர்கள் தவறு இழைத்தால் அவர்களை சமுகவிரோதியாக அல்லது எதிரியாக கருதி அணுகுதல் போன்றவையாகும்.

(16) தவறுகளை மறைப்பதற்கு எதிரிமீது தாக்குதல்களைச்செய்து தோழர்களை மயக்க முற்படுதல்.

(17) கன்முடித்தனமான ஓடர்களை கொள்கை அமுல்படுத்தல்.

(18) மத்திய ஸ்தாபன தோழர்களே கைதுசெய்யப்பட்டு சித்திரவதை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை.

(இ) ஸ்தாபன அமைப்பு வடிவரீதியில்:

(1) கருத்துமுரண்பாடுகளை உட்கட்சிப்போராட்டங்களை நிருவாக அதிகாரத்தைப்-பயன்படுத்தி அடக்குதல்.

(2) தனிநபரை முதன்மைப்படுத்திய தாபன அமைப்பு.

(3) நேரடியாகக்குழுச்சேர்த்தலில் ஈடுபடல்.

(4) தனக்கென ஒரு குழு சேர்கிறது எனக்கூறும், காலதுபோல் மறைமுகமாகத்-தூண்டுதல்.

(5) தாபனத்தின் சொத்துக்கள் நிதி போன்றவற்றை கையாளும் உரிமையைப்பயன்படுத்தி சிலருக்கு சலுகைகள் செய்து குழுச்சேர்த்தல்.

(6) கமிட்டி ரீதியாகச்செயற்படும் அங்கங்களை உதாசீனம் செய்தல்.

(7) தனிமனிதனை மையமாகக்கொண்டு கன்முடித்தனமான தனிமனித விசுவாசத்தின்-தனிமனித எதேச்சிகாரத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு குழுவிடம் அனைத்து அதிகாரங்களும் குவிந்திருத்தல்.

(8) தாபனத்தின் பொறுப்பானவர்கள் தமது விவகாரங்களை தாபனம் விமர்சிப்பதோ, கேள்வி கேட்பதோ, கணக்குக்கேட்பதோ தாபன ஒழுக்கை உடைக்கும்செயல் என அர்த்தப்படுத்தல். அதாவது; எந்த விவகாரத்தைக்கேட்டாலும் அது இராணுவ விடயம் என மழுப்புதல்.

(9) இராணுவ அங்கம் தவிர்ந்த அனைத்து அங்ககங்களின் பொறுப்புக்களையும்-(செயலதிபர் உட்பட) இவ்வளவு பெரிய தாபனமாக வளர்ந்த பின்னரும்கூட நியமனங்களாகவே நிலவுகின்றன. தேர்வுமுறை புறக்கணிக்கப்பட்டுள்ளது.

(10) இப்படி நியமனம் ஆகிய காரணத்தால் அத்தோழர்களை விமர்சிக்கவோ, விலக்கவோ முடியாதுள்ளமை. இதன் காரணத்தால் அங்கங்கள் தத்தமக்குள் இருக்கும் -திறமையானவர்களையும், தகுதியானவர்களையும் முன்கொண்டு வரமுடியாமல் இருத்தல்.

(11) அரசியல் இராணுவ வேலைகளை விட நிர்வாக வேலைகளை முதன்மைப்படுத்தல். இதனால் அரசியல் இராணுவ விடயங்களில் தோழர்களை வளர்த்தெடுக்க முடியவில்லை. பதிலாக அரசியல் அறிவற்ற நிருவாகிகளையும், இராணுவ அறிவற்ற நிருவாகி-களையுமே முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ளதைப்போன்று உருவாக்கியுள்ளோம்

(12) உட்கட்சிப்போராட்டத்தில் ஈடுபடும் தோழர்களை பதவியிறக்கல், அல்லது முக்கியத்துவமற்ற பதவிமாற்றங்களைச்செய்தல். தளத்திற்கும் பின்தளத்திற்கும் மாறிமாறி அனுப்புதல். மாவட்டங்களை மாற்றுதல். போன்ற நடவடிக்கைகளுக்கூடாக தொடர்புகொள்ளச்செய்து பயமுறுத்தி உட்கட்சிப்போராட்டத்தை நசுக்குதல்.

(13) நிதி விவகாரங்களை ஒருசில தனிநபர்கள் கையாளுவதனூடாக அதிகாரத்தை -நிலைநாட்டுதல். பாரபட்சமான முறையில் அதைப்பங்கீடுசெய்து அங்கத்தவர்களையோ, தோழர்களையோ செயல் இழக்கச்செய்தல். அல்லது கட்டுப்படுத்துதல்.

(14) எமது தாபனத்தின் உயர் அங்கமான மத்திய தாபனத்திற்குள்ளேயே தனிநபர் -அதிகாரப்போக்கு.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(15) பொறுப்பான பதவிகளில் இருந்து கொண்டுகூட கேட்கப்படும் கேள்விகளுக்கு- மௌனம் சாதித்து தம்மைக்காப்பாற்றிக்கொள்ளல்.

(16) பொறுப்பானவர்கள்கூட ஒரே விடயத்தைப்பற்றி விந்தியாசமான கருத்துக்களைக் கூறல்.

(17) செயற்படும் அங்கங்களின் செயற்பாடுகள் ஒரு ஒருங்கிணைவுக்குள் உள்ளாக்கப்படவில்லை. பதிலாக முரண்பட்டுள்ளமை.

(18) அங்கங்களுக்கு வழிகாட்டத்தவறியமை.

(ஈ) மக்களுடனான அணுகு முறையில்.

(1) காட்டிக்கொடுத்தல் தவிர்ந்த ஏனைய சமூகவிரோதச் செயல்களுக்கும் எமது சமுக பொருளாதார அமைப்பிற்கும் அதாவது; சுரண்டல் சமுக அமைப்பிற்கும் இடையில் உள்ள உறவை மறந்து இச்சமுகவிரோதச் செயல்கள் ஏன் தோன்றுகின்றன என்ற மூல காரணத்தை ஆராய்வதை நிராகரித்தல்;

(2) சமுக் சீர்திருத்தவாத நோக்கில் இருந்தும் கதாநாயகவாத நோக்கில் இருந்தும் மக்கள்மேல் மேற்கொண்ட தடி அடிகள், சித்திரவதைகள், மரண தண்டனைகள்

(3) தமக்குப்புரியாத சிவில் நிருவாக வேலைகளை வெறும் இராணுவ நிர்வாக வேலைகளாகக்கருதி பலாத்கார நடவடிக்கைகளில் இறங்கியமை.

(4) கட்டாய நிதி சேகரிப்பில் ஈடுபடல்.

(5) நீதியான விசாரணை இன்றிய மரண தண்டனைகள்.

(6) கைது செய்யும் முறையில் எதிரி இராணுவத்தை ஒத்திருத்தல்;

(7) மக்கள் தமது சொந்த விவகாரங்களை கையாளும் உரிமையை மறுத்தல்;

(8) மக்களது தன்னெழுச்சியமான போராட்டங்களை அடக்க முற்படல்;

(9) மக்கள் தாபனங்களின் பொது நிருவாகங்களின் தனித்துவத்தை மறுத்தல்;

(10) சம்பவங்களுக்கு உரிமைகோராதுவிடல்.

நாம் அராஜகவாதத்தின் செயற்பாடுகளை உற்று நோக்கினால் இவற்றுள் - சிலவே அராஜகவாதத்திற்கான ஊற்றுக்கண்களாகவும், விளங்குவதைப்பார்க்கலாம். எனவேதான் அராஜகவாதத்திற்கு எதிரான சரியான அடிப்படையில் உட்கட்சிப்போராட்டம் அமையாவிட்டால் அராஜகவாதம் வெட்டவெட்டத்தழைத்துக்கொண்டேயிருக்கும்.

வலது சந்தர்ப்பவாதம், இடது தீவிரவாதம் தாராளவாதம், தயக்கவாதம் இவையெல்லாம் ஒரு கட்டத்திற்கு அப்பால் அராஜகவாதமாக மறு உருவெடுக்கின்றன. அதேபோல் அராஜகவாதமும் மேற்கூறிய வடிவங்களுக்குள் தன்னை மறைத்துக் கொள்கின்றது.

எனவே நாம் அராஜகவாதத்தின் வேர்களை வெட்டி வீழ்த்துவதில் உறுதியாக இருக்கவேண்டும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(ஆ) அராஜகவாதப்போக்கினால் அதீத இயக்கங்களுக்கும் தமிழீழப் பிரதேச-
மக்களுக்கும் இடையே தோன்றியுள்ள இடைவெளி:

---

(1) மக்கள் இயக்கங்களைக்கண்டு அஞ்சுதல்;

(2) இதன்காரணத்தால் காட்டிக்கொடுக்க முற்படல்;

(3) நேரடியாகவோ, மறைமுகமாகவோ விடுதலைப்போராட்டத்தைவிட்டு ஒதுங்குதல்;
ஆதரவு தெரிவிக்கமறுத்தல்.

(4) இயக்கங்களுக்கு எதிராக வெகுஜனப்போராட்டங்களில் ஈடுபடல்.

(5) அராஜகத்தனத்தை சமுகத்தின் உயர் அடுக்குகள் பாவிப்பதால்பரந்துபட்ட மக்களிடமிருந்து இயக்கங்கள் அன்னியப்படல்.

(6) அராஜகத்தனமான வீணான பூர்வமற்ற அரசியல் இராணுவ வேலைத்திட்டங்களால் விடுதலைப்போராட்டத்தில் நம்பிக்கை இழந்தமை.

(7) ஆயுதப்போராட்டத்தில் மக்களின் முக்கிய பங்களிப்புப் பறிக்கப்பட்டமையானது பரந்துபட்ட மக்களை யுத்த மனோபாவத்தில் இருந்து விடுத்தி புதிகால் பிடரியில் அடிபடபின்வாங்கும் மனோபாவத்தையே வளர்த்துள்ளது. தமிழீழம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை- தற்போதுள்ள வாழ்கையேபோதும் என்ற நிலைமைக்கு - மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். இது நிவிர்த்திசெய்யப்படாதவிடத்து எமது போராட்டம் தவிர்க்கஇயலாத பெரும் அழிவுகளையும், நீண்டகாலத்திற்கு தலையெடுக்க-முடியாத தோல்வியையும் தரும் என்பதே உண்மை.

(8) இயக்கங்களுக்கிடையிலான இயக்கவெறி மக்களின் ஒரு பகுதியினரையும் பீடித்து மக்களை கூறுபோட வழிவகுத்துள்ளது.

(9) மிகப்பெரிய கோடிக்கணக்கில், இலட்சக்கணக்கில் நடைபெறும் ஊழல்கள், பண-மோசடிகள், பதுக்கல்கள், கொப்படங்கள், கள்ளக்கடத்தல்கள், மரப்போதைப்பொருட்கள் விநியோகங்கள் என்பவற்றைப்பார்க்க மறுத்து சிறு சிறு மிகச்சிறிய சம்பவங்களுக்கு மரணதண்டனையுட்பட தண்டனை வழங்கியமையானது அடிமட்டத்து மக்களை-விடுதலை இயக்கங்களைவிட்டு வெகுதூரத்தில் அந்நியப்படவைத்துள்ளது. இது நீண்டகாலப்போராட்டத்தின் வெற்றிக்குரிய காரணங்களில் ஒன்றை வெட்டி வீழ்த்தினதாகும்.

(10) குறுகிய தேசியவாத நடவடிக்கைகளால் சிங்களமக்கள், முஸ்லீம் மக்கள் ஆகியோர் பகைநிலையை எடுத்துள்ளமை.

(11) மக்கள் தாபனங்களின் எந்த அறிக்கைகளையும் நம்பிக்கை இழந்து நோக்குதல்; பெய்என மறுத்தல்.

(இ) அராஜகவாதத்திற்கான அரசியல் காரணிகள். குறிப்பாக எமது தாபனத்தின் - அராஜகத்திற்கான அரசியற்காரணிகள்:

---

(1) சிறுமுதலாளித்துவத் தீவிரவாதம்;

(2) சிறுமுதலாளித்துவ சாகசவாதம்;

(3) சிறுமுதலாளித்துவ கற்பனாவாதம்;

(4) ஆழமான, நிதானமான சமுக அரசியற் பார்வை இல்லாமற்போனமை;

(5) கண்மூடித்தனமான கட்டளைக்கு கீழ்ப்படிதல்-கொள்கை.

(6) சர்வதேச, பிராந்திய, வல்லரசுகளின் ஊடுருவலும், ஆதிக்கமும். அதாவது; தமக்கெதிரான சக்திகளை அழிக்கத்தூண்டி ஆயுதம் வழங்கல்;

(7) கூட்டுச்சிந்தனையோ, கூட்டுத்தலைமையோ, கூட்டு உழைப்போ இல்லாத உட்கட்சி ஜனநாயகத்தை மறுக்கும்சிந்தனைப்போக்கு;



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(8) ஆரம்பகால் தனிநபர் பயங்கரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட குழுவாக அமைந்த எமது தாபனம் இப்போது தன்னைச்சுற்றி ஒருபெரும் கூட்டத்தை அமைத்து கொண்டதே தவிர தன்னை குறைந்த பட்சம் ஒரு இயக்கவடிவத்தில் கூடக்கொண்டு வரவில்லை.

(9) உழைக்கும் வர்க்கத்த லைமையை உருவாக்கத்தவறியமை.

(10) தமிழீழத்தின்பிற்போக்கு ஆளும் வர்க்கச்சக்திகளின் அரசியற்சதி(இவர்களே- அனேகமாக தமிழீழத்தைவிட்டு வெளியே சர்வ உலகத்திலும் பரவி வாழுகின் றுர்கள்..)

(11) அரசியல் வறுமை அல்லது வங்குரோத்துத்தனம்.

(12) இயக்க அமைவின் சமூகத்திலுள்ள எச்ச சொச்சங்களை அப்படியே உள்வாங்கி அதைத்திருத்துவதற்கான முயற்சிகள்எதும் எடுக்காமல் அதை மேலும் வளர்த்து எடுத்துக்கொண்டமை.

(13) தனிநபர் வழிபாட்டுத்தன்மை.

(14.) தோழர்களை அரசியல்மயப்படுத்தாமை; குறிப்பாக ஆயுதங்களுடன் சம்பந்த முள்ள தோழர்களை அரசியல்மயப்படுத்தாமை.

(15) கோஸ்டிவாதம். குறிப்பாக தலைமைத்தோழர்கள் மத்தியில் கூட்டுமுறையின்றி- கோஸ்டிகளாகப்பிரிந்து இருத்தல்;

(16.) தளத்தைவிட்டு தலைமை பிரிந்து அந்நிய பிற்போக்கு ஆதிக்கமுள்ள நாட்டில் பின் தளம் அமைத்தமை;

(17) தளத்தைவிட பின்தளமே அதிகாரமையமாக்கியமை;

(18) ஒழுங்கான வேலைத்திட்டமின்மை.

(19) மத்தியதாபனமோ, கட்டுப்பாட்டுக்குழுவோ போதியளவு அரசியல் வளர்ச்சி- இன்மை;

(20) நிருவாகப்பரவலாக்கல் இன்மை;

(21) ஒழுங்கான யாப்புக்களோ, அல்லது சிறிய விடயங்கள் உட்பட எதற்கும் திட்டவட் டமான கொள்கை வரையறைகயோ இன்மை;

(22) 83ன் பின்பாகத்திடீர் வளர்ச்சி.

(23) தேர்வு முறையை வளர்த்தெடுப்பதற்கு நியமனமுறையை தொடர்ந்தும் நிலை- நாட்டியமை.

(24) தலைமை தமிழர் விடுதலைக்கூட்டணியின் சதிவலைக்குள் சிக்கியமை.

(25) மக்களே வரலாற்றைப்படைக்கின்றுர்கள். என்ற முதுஉண்மையை புரிந்து கொள் ளாது அல்லது புரிந்துகொள்ளமறுக்கும் நிலையியல்பார்வை. ஆனால்வெளியில்- மோசமாகப்பயன்படுத்தல்.

(26) தாராளவாதத்தை வளரவிட்டமை. இது குறிப்பிட்ட கட்டத்திற்கு அப்பால்- அராஜகவாதமாக உருமாறுகின்றது.

(27) சுத்த இராணுவக்கண்ணேட்டம்.

(ஈ) எமது தாபன வடிவத்திற்கும் அராஜகவாதத்திற்கும் உள்ள தொடர்பு

---

(இது ஏற்கனவே ஆராயப்பட்டுள்ளது)

-8-

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(உ) மத்திய தாபனத்திற்கும் மாவட்ட தலைமை அங்கத்திற்கும் தவறுகளுக்கும் இடையேயுள்ள தொடர்பு:

(1) தோழர்களிடமோ, அங்கங்களிடமோ வேலைகளைக் கண்காணிக்காமை; அரசியல் வழிகாட்டல் வழங்காமை. உதாரணம்; அறிக்கைகள் அனுப்பினால் பதில் அனுப்பாமை: அனுப்பாவிட்டால் அக்கறையின்றி இருத்தல்.

(2) தங்களை அரசியல் இராணுவ தலைமை அங்கமாக கருதாமல் வெறும் நிருவாக அங்கமாக கருதியமை.

(3) அராஜகவாதத்தை தோற்றுவித்து வளர்த்தெடுக்கக்கூடிய எமது தாபன வடிவமைப்பை பாதுகாத்து வளர்த்ததில் முதன்மைப்பங்கு வகித்ததில் மத்தியதாபனமேயாகும் மாவட்டக்கமிட்டிகளும் இதற்குத்துணைபோயின:

(4) இக்கமிட்டிகளும் உண்மையான கமிட்டிகளாக விளங்காமல், தனிநபரை மையப்படுத்தி கோஸ்டிகளாக இருந்தமை.

(5) தவறுகளை ஆரம்பத்திலேயே களையக்கூட்டு முயற்சி எடுக்காமல் தாராளவாதத்துடன் அமைதிகண்டமை, அல்லது வெட்டிவிட முற்பட்டமை.

(6) மத்தியதாபனமானது அலங்காரக்கதிரைகள் வழங்கப்பட்ட முதலாளித்துவ அமைச்சரைப்போலவே அமைந்திருந்தது.

(7) செயலதிபர், மத்தியஸ்தாபனம், மாவட்டக்கமிட்டிகள் போன்றவை அரசியல் இடைவெளியைக்கொண்டமை.

(8) இக்கமிட்டிகளும் செயலதிபரும் காங்கிரசைக்கூட்டி தீர்வுக்கு உட்படுத்தாமை.

(9) இராணுவ அங்கத்திற்கு அரசியல் தலைமை கொடுக்கத்தவறியமை; முற்பட்டிருந்தால் தளத்தில் உட்கட்சி ஜனநாயகம் மலர்ந்திருக்கும்.

(10) இக்கமிட்டிகளிடையேயும், கமிட்டிகளுக்குள்ளேயும் சுயவிமர்சனம் விமர்சனப்பழக்கமின்மை.

(11) மத்தியதாபனம், தளக்கமிட்டி, மாவட்டத்தலைமை அங்கம் என்பவற்றுக்கிடையில் சரியான தொடர்பின்றிப்போனமை.

(12) மத்தியதாபனமானது அனைத்து அங்கங்களுக்கும் தேவையான இவலைத்திட்டங்களை வரையறுத்து வழங்கி நெறிப்படுத்தாமை.

(13) மேற்படி அமைப்புக்களின் அங்கங்களுக்குள் ஏற்பட்ட பிணக்குகளை கருத்து வேறுபாடுகளை. களையாமை; அல்லது தீர்த்து வைக்காமை.

(14) மேற்படி கருத்து வேறுபாடுகளை தலைமைமட்டக்கோஸ்டிகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தியமை அல்லது கையாண்டமை.

(15) மாவட்ட அமைப்புக்கள் தமது தளத்திலுள்ள ஏனைய வர்க்கங்களிடமும், தவறுகளை விமர்சிக்கவோ அல்லது. வெளிப்படுத்தவோ தயங்கியமை. தலைமையில் உள்ள தவறுகளையிட்டு இதே நிலைப்பாட்டை எடுத்தசிலர் இத்தவறுகளை தமக்குச் சாதகமாக பயன்படுத்தியமை.

(ஊ) அனைத்து விடுதலை இயக்கங்களின் வீழ்ச்சிக்குவித்திட்ட அகநிலை புறநிலைக் காரணிகள்:

அகநிலைக்காரணிகள்:

(1) அராஜகவாதம். இது தாபனத்துள்ளும் வெளியிலுமாகும்.

(2) விஞ்ஞான பூர்வ அடிப்படையில் அமைந்த பூரணவேலைத்திட்டமின்மை.

(3) தாபனத்துக்குள் உள் ஐக்கியமின்மை. சரியான தலைமையின்மை.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(4) ஐக்கியமுன்னணி இல்லாத பொதுவேலைத்திட்டம் இல்லாத சூழ்நிலையில் பல பெரிய/சிறிய இயக்கங்கள் செயற்படுவதும் மக்களின் மனவீழ்ச்சிக்கு இது பிரதானமான காரணமாகும்.

(5) பல்வேறு இயக்கங்களும் தந்தமக்குள்உள்ளான முரன்பாடுகளை ஆயுதமுனையில் தீர்த்துக்கொள்ளமுற்படல்.

(6) பொது அரசியல் இராணுவ வேலைத்திட்டங்கள் இல்லாத சூழ்நிலையில் ஏனைய இயக்கங்களின் இம்மாதிரிச்செயற்பாடுகளின் அரசியல் இராணுவ பின்விளைவுகளை சற்றும் மனங்கொள்ளாது ஒவ்வொரு இயக்கமும் தமது வேலைத் திட்டங்களை வருத்து அமுல்படுத்துவது;

(7) முஸ்லீம் மக்களையும் மலையக மக்களையும் இவ்விடுதலைப்போராட்டத்தில் இணைத்துக்கொள்ளத்தவறியமை. இதனால் அவர்கள் அந்நியப்பட்டே அல்லது பகைமையாக்கியே நிற்பது;

(8) அவர்களுடனான சிநேகிதரீதியான முரன்பாடுகளை பகைமை முரன்பாடுகளாக மாற்றியது.

(9) உழைக்கும் மக்களை அணிதிரட்டி தலைமைத் தாபனத்திற்கு கொண்டுவரத் தவறியமை

(10) முழுத்தேசிய மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆற்றல் இன்றிப்போனமை.

(11) ஆயுதப்போராட்டத்தை ஒழுங்கான முறையில் நடத்த வக்கற்றுப்போனமை.

(12) கடுமையான நிதி ஆயுதத்தட்டுப்பாடு.

(13) எமது மக்களில் தங்கி நிற்கத்தவறியமை. சொந்த மண்ணில் தளம் இன்றிப்போனமை.

(14) அதேவேளையில் அந்நிய நாடுகளிலும் சர்வதேச உதவிகளிலும் அதிகம் எதிர்பார்ப்பு.

(15) சமூகத்தின் பல்வேறு பிரிவினரைக் குறிப்பாக புத்திஜீவிகளையும், தொழில்நுட்ப வியலாளர்களையும் அணிதிரட்ட தவறியமை (சில தாபனங்கள் புத்திஜீவிகளை கொலை செய்வதும் துரத்தியடித்தும் உள்ளன).

(16) இப்பலவீனத்தால் அந்நிய பிற்போக்கு சக்திகளிடம் அரிசியல் இராணுவ ஆலோசனைக்கு தங்கியிருத்தல் ஓரளவுக்காவது உற்பத்தி செய்ய வக்கற்றுப் போனமை.

(17) தமிழீழத்திலும், ஸ்ரீலங்காவிலும், வெளிநாடுகளிலும் உள்ள தமிழ் பிற்போக்கு முதலாளித்துவ சக்திகள் எமது விடுதலைப் போராட்டத்தில் ஆதிக்கம் செலுத்தும் தன்மை.

(18) வெகுஜன அரசியல் வேலைகளை புறக்கணிக்கும் சுத்த இராணுவ கன்னேட்ட வாதிகள் ஆதிக்கத்தில் இருத்தல்.

(19) எமது பிரதேசத்திற்கேற்றதான இராணுவத் தயாரிப்பு இன்மை.

(20) விடுதலை இயக்கத் தோழர்கள் குறிப்பாக இராணுவ அங்கத்தை சேர்ந்த தோழர்கள். யுத்தத்தின் அரசியல் நோக்கத்தை புரிந்து கொள்ளாமை.

(21) ஒரு ஆக்கிரமிப்பிலுள்ள பிரதேசத்திலுள்ள இராணுவத்தை வெளியேற்றுவது என்பதற்கான நடவடிக்கை என்பதற்கான நடவடிக்கைகளைத் தவிர புதியதொரு அரசை அமைப்பதற்கான வேலைத் திட்டங்களோ, நடவடிக்கைகளோ இல்லை.

(22) மக்கள் யுத்தத்திற்கென ஆயுதப் போராட்ட நோக்கிலோ தயாரிக்கப்படாமை

(23) மக்களுக்குள் சங்கமமாகவேண்டிய இயக்கங்கள் மேலும் மேலும் மக்களை விட்டு தூரப் போதல்.

(24) இயக்கங்களினுள் குறிப்பிட்டளவு மேலணியர் விதேசிய சார்பு முதலாளித்துவ அணியாகவும், முதலாளித்துவ அதிகார அணியாகவும்; மாறிவருவதால் புரட்சிகர உணர்வை இயக்கம் படிப்படியாக இளந்து வரல்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(25) ஒவ்வொரு இயக்கமும் தன்து தோழர்களை நீண்டகாலப் போராட்டத்திற்குத் தயார்படுத்தாமை.

(26) சிவில் நிர்வாகத்தை சீர்குலைக்கும் போது பதில் நிர்வாக அமைப்புக்களை கட்டத்தவறியமை. இதனால் புதிதாகவே வேலைகளை ஆரம்பிக்க வேண்டி இருப்ப

(27) கொலை நோக்குள்ள விஞ்ஞானபூர்வமாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய மக்களில் தங்கியுள்ள மக்களின் சுய ஆற்றலை வெளிக் கொணரக்கூடிய யுத்த மூலோபாயமி

(28) வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அமையாத ஆளுருவிப்பு.

(29) ஏற்கனவே கையாண்ட அரசியல் இராணுவ வேலைத்திட்டங்களின் தோல்வியால் இயக்கத் தோழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மனவிரக்தி.

(30) பின்வரும் காரணங்களுக்காக இந்தியாவிடம் தங்கியுள்ளமை.

அ. பின்தளம்.

ஆ. ஆயுதம்.

இ. பொருளாதாரம்.

ஈ. அரசியல் ஆலோசனைகள்.

உ. தலைமை மட்ட அங்கத்தவர்களின், குடும்ப வாழ்வும், குடும்ப பாதுகாப்பும்.

ஊ. சர்வதேச அங்கீகாரம் பிரச்சாரம்.

(31) இந்தியாவின் பங்கை தெளிவுப்படுத்தாமல் அதாவது அதன் உள்நோக்கத்தை தெளிவுப்படுத்தாமல், இந்தியாவைப் பற்றி நல்ல அபிப்பிராயத்தை வளர்த்து வருதல்.

(32) பொருளாதார உற்பத்தியில் ஈடுபடுவதில் நாட்டமற்ற ஏராளமான தோழரை சேர்த்தமை.

__புறநிலைகாரணிகள்:__

(1) சர்வதேச சக்திகள் எம்மீதான ஆதிக்கமும், ஊடுருவலும் அதிகரித்தல்.

(2) இந்தியா எமது விடுதலைப் போராட்டத்தை பின்தள்ள எடுக்கும் முயற்சி.

(3) எமது விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய தவறான சர்வதேச பிரச்சாரங்களும் எத்தனங்களும்.

அதாவது எமது போராட்டத்தை ஒரு விடுதலைப் போராட்டமாக அல்லது தேசிய இன உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளாகப் பிரச்சாரப்படுத்தப் பட்டுள்ளன.

(4) சர்வதேச முற்போக்கு சக்திகளின் பங்களிப்பு போதியளவு இல்லாமல் இருப்ப

(5) பிராந்திய வல்லரசான இந்தியாவின் நலன்கள் உள்ளடங்கிய சர்வதேச முரண்பாடுகள், எமக்கு சாதகமல்லாது இருத்தல்.

(6) ஸ்ரீலங்கா அரசிற்கும், சிங்கள மக்களிற்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடையாமல் இருப்பதும், அதற்கான காரணிகளும்.

(7) ஸ்ரீலங்கா அரசிற்கு வல்லரசுகள் துணை வல்லரசுகள் நேரடி ஆயுதத் தளபாடங்க உதவி வழங்கல் (பிற்போக்கு உளவு தாபனங்களில் பூரண நேரடி உதவி)

(8) எமது ஆயுதப் போராட்டத்திற்கான விசேடித்த இராணுவப் புவியியல் இவைகளின் பாதகமான அம்சங்களே கூடியுள்ளன.

அ. நீண்ட எல்லைப் புறம்.

ஆ. கிழக்கு மாகாணத்தின், இயற்கை பாதுகாப்பற்ற தன்மை.

இ. கிழக்கு மாகாணத்தின் ஒடுங்கிய பிரதேச அமைப்பு.

ஈ. வன்னிப் பிரதேசத்தில் போதிய காடுகள் இன்மை.

உ. வன்னிப்பிரதேசத்தின் உட்பாதைகள், அடிக்கடி மழை போன்றவற்றால் சேதமுறல்.

ஊ. வன்னிப் பிரதேசத்தில் சில பகுதிகளில் கடுமையான ஐதான மக்கள் குடியிப்பு

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எ. யாழ். மாவட்டத்திற்கும், வன்னி பிரதேசத்திற்கும் இடையிலான தரைப்பாதை காடுகள், அற்றிருக்கும் தன்மை ஒடுங்கிய கழுத்துப் போன்ற பாதுகாப்பற்ற தொடுப்பிரதேசம் ஆகும். மழையினால் இப்பாதையும் அதிகம் சேதமுற்று விடும்.

ஏ. வடக்கு, கிழக்கு இராணுவ பிரதேச கிலைவின்மை.

(9) தமிழீழத்திற்கென மையப்படுத்தப்பட்ட பொதுப் பொருளாதார அசுக்கட்டுமானம் இல்லாமை.

(10) ஸ்ரீலங்கா அரசு யுத்தத்தின் வளர்ச்சி விதிகளையும் அரசியல் நோக்கங்களையும், எம்முடன் ஒப்பிடும் போது மிகவும் முன்னேறிய வகையில் கையாளல்.

(11) எதிரியின் பாரிய இராணுவச் செயற்பாடு.

(12) விடுதலை தாபனங்கள் அநாவசியமான யுத்த நிறுத்தத்திற்குத் தள்ளப்பட்டமை.

எ. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சர்வதேச பரிமாணங்கள்:

அமெரிக்கா

(1) நவகாலனித்துவ இலங்கையின் உறுதிப்பாட்டுக்கே அமெரிக்கா முனைகிறது குறிப்பாக தனது இராணுவத் தளமாக்க முற்படுகிறது.

(2) அதே வேளையில் இந்தியாவை அழவுள்ள நாடுகளை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதனூடாக இந்தியாவை பொருளாதார ரீதியிலும், இராணுவ ரீதியிலும் பலவீனப் படுத்துவது.

(3) இந்து சமுத்திர பிராந்தியத்தில் சோவியத் ரஷ்யாவின் ஆதிக்கத்தை வீழ்த்த முற்படல். (குறிப்பாக இராணுவ ரீதியில்)

(4) இந்தியாவிற்குள் வலது சக்திகளைப் பயன்படுத்தி இந்தியாவை பலவீனப்படுத்த முற்படல்.

இந்தியா

(1) தமிழீழ விடுதலை இயக்கங்களை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர பூரணமுயற்சி எடுக்கின்றது.

(2) ஆனால் தமிழீழம் அமைவதை அழிவதை ஒருபோதும் விரும்பாது.

(3) ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஸ்ரீலங்காவை மிரட்டி பணியவைப்பதற்கு முயற்சித்தல்.

(4) ஏனெனில் தன்னைச் சூழவுள்ள நாடுகளில் தனது அரசியல், இராணுவ, பொருளாதார ஆதிக்கத்தை நிலைகாட்ட முற்படல்.

(5) அதாவது ஒரு பிராந்திய வல்லரசாக நிலைநாட்ட முற்படல்.

(6) இந்த நலனுக்கு பாதகமல்லாத முறையில் இரு வல்லரசு நாடுகளின் உறவை பேண முயலும்.

(7) சூழவுள்ள நாடுகளின் விடுதலைப் போராட்டங்களை அரசியல் குளப்பங்களை தனது பிராந்திய உறுதிப்பாட்டிற்காகப் பயன்படுத்திக் கொள்ளும் தேவை ஏற்படின் நசுக்கும்.

(8) தனது உளவுத் தாபனங்களின் செயற்பாட்டை விடுதலை இயக்கங்களுக்குள் செயற்படுத்தல்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சோஷலிச நாடுகள்:

சோவியத் ரஷ்யா

(1) இந்தியாவுடன் முரண்படுவதை தவிர்த்துக் கொள்ளவே விரும்புகிறது.

(2) அதே வேளை தனது சார்பு நாடுகூடாக விடுதலை இயக்கங்களுடன் தொடர்புகளை வலுப்படுத்த முயல்கிறது.

(3) ஆனால் இதன் உள்நோக்கம் இந்தியாவின் தனக்குச் சார்பான ஸ்திரப்பாட்டை பாதுகாப்பதேயாகும்.

(4) எனவே இந்தியாவிற்கு எதிராக விடுதலை இயக்கங்கள் செயற்படுமானால் இதனது நிலைப்பாடு எதிரானதாகவே மாறும்.

(5) அமெரிக்காவை பலவீனப்படுத்துவதற்கு தொடர்பான பல தந்திரோபாயங்களை ரஷ்யா காலத்திற்குக் காலம் எடுத்து வந்துள்ளது.

(6) குறிப்பாக அமெரிக்காவின் கூட்டு இராணுவ வலையங்களை உடைப்பதையே பிரதானமான நோக்கமாகக் கொள்கிறது. உதாரணம்: என்.ஏ.டி.ஓ., நாடுகளின் அணு ஆயுத திட்டத்தை உடைக்க முற்படல்.

(7) இப்பிரச்சனையை கையாளும்போது சர்வதேச நாடுகளில் அமெரிக்காவிற்கு எதிரான சக்திகளின் எதிர்ப்புணர்வை இயங்கியல் ரீதியாக அணுகுவதற்குப் பதிலாக அராஜகவாத கண்ணோட்டத்துடனேயே அணுகி வந்தது.

(8) தற்போது அது தனது நிலைப்பாட்டை மேற்கூறிய அணுகு முறையில் இருந்து மாற்ற முயல்கிறது (உதாரணம்) என்.ஏ.டி.ஓ., நாடுகளிற்கு தன்னை நல்ல பிள்ளையாக காட்ட முற்படுவது.
அமெரிக்காவுடன் சில விட்டுக் கொடுத்தலுடனான தந்திரங்கள். அதாவது ஒரு சமாதானப் பிரியன் என்ற பெயரை மீட்க முயன்றது.

(9) எனவே இந்த அடிப்படையில் பார்க்கும் போது அது ஜே.ஆர். அரசுடன் பகைமையை ஏற்படுத்திக் கொள்ளவும், விரும்பாது.

## சீனா:

(1) இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்கத்தை வீழ்த்துவதும், இந்தியாவுடன் எல்லைப்பிராந்தியத்துடன் இருக்கக் கூடிய பிரச்சனைகளாலும்,

(2) அதே நேரத்தில் இரு வல்லரசுகளின் ஆதிக்கத்தையும் தவிர்க்க முயல்கிறது.

(3) எனவே அது இந்தியாவைப் பலவீனப்படுத்தும் விதத்திலேயே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அணுகுகிறது.

(4) இதனடிப்படையிலேயே சிறிலங்கா அரசிற்கு இராணுவ உதவிகளை வழங்குகிறது.

## குறிப்பு:

சோசலிச நாடுகள் தற்போது எடுத்துவரும் நிலைப்பாடுகளில் பல சாதக பாதக அம்சங்கள் காணப்படுகின்றன. எமது தனித்துவத்தை இழந்து நாம் அவர்களுடன் உறவு கொள்வது என்பது எமக்குப் பாதகமான அம்சங்களை மேலோங்கப் பண்ணும். எனவே தனித்துவத்தை இழக்காமலே உறவு கொள்ள வேண்டும்.

## ஏ. தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்ந்து செல்வதற்கு நாம் முகம் கொடுக்கும் பிரச்சனைகள்:

(1)

அ. எமது போராட்டத்தின் பிரதான வடிவம் ஆயுதப் போராட்டமாகும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆ. எமது விசேஷ சூழ்நிலைகளைப் பொறுத்து இதுவே தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கிறது.

இ. இதன் காரணத்தாலும் சர்வதேச இராணுவ சமநிலைகளின் காரணத்தாலும், எதிரி இராணுவ செறிவாக்கலுக்கு உட்படுகின்றான்.

ஈ. எனவே இதன் உடனடித் தாக்குதலாக எமது பக்கத்திலும், இராணுவச் செறிவாக்கத்திற்கான உந்துதலோ நிகழ்கிறது.

உ. இவ் இராணுவச் செறிவாக்கலை மையமாகக் கொண்டு அனைத்தும் அதாவது தாபனக் கட்டமைப்பு உட்பட்ட அனைத்தும் தீர்மானிக்க உந்தப்படுகிறனர். அதே நேரம் இந்தப்படிமுறைகளானவை குட்டி முதலாளியச் சூழல் நிகழ்த்தப் பெறுவதால் இராணுவ அராஜக தனமான குழுக்களின் தோற்றமும், இருப்பும் செயற்பாடுகளும் நிகழ்கின்றன.

ஊ. இது முற்போக்கு சக்திகள் மத்தியிலும் இருவிதமான திசைவிலகல்களை ஏற்படுத்துகின்றன.

1. முன்முயற்சி இழந்த சோர்வடையும் போக்கு கற்பனாவாத சிந்தனை அரசியல் அராஜகம், சிதறல், நிலையில் பார்வைகள்.
2. இராணுவக் குழுக்களுள், முதன்மை ஸ்தானத்தை அடைய முயற்சித்த அராஜகத் தனங்களிற்கு ஆட்படலும் அரசியல் பார்வை இழந்து விடலும். இது புரட்சிக்கு பாதகமான சூழலாகும்.

<u>மறுபக்கத்தில்</u>

அ. எதிரியின் இராணுவச் செறிவாக்கத்தை வேகமான செறிவாக்கத்தை சிறு முதலாளித்துவ இராணுவக் குழுக்களால் ஈடுகட்ட முடியாது.

ஆ. இன்றும் இவர்கள் மத்தியில் மிக மோசமான அளவில் மனக்கசப்பும், மனச் சோர் அதிதீவிரசாகச வாதமும் தூண்டப்படும். அதோடு உட்கட்சி போராட்டத்தை அடக்க நினைக்கும் அராஜகமும் தூண்டப்படும்.

இ. இது ஈடுசெய்யப்பட வேண்டும் என்றாலும், மொத்த மக்களும் கொடூரமான யுத்தத்திற்கு முகங்கொடுக்கக் கூடிய அளவில் ஆயுத பாணிகளாக ஆக்குவதாலேயா

ஈ. அதோடு இது நீண்டகால போராட்டமாகவும், அமையும்.

உ. இவற்றை நடைமுறைப்படுத்த சிறு முதலாளித்துவ அராஜகவாத குழுத் தலைமையில் நிறைவேற்ற முடியாது.

ஊ. இது பாட்டாளி வர்க்க சக்திகளாலேயே தலைமை தாங்கப்பட வேண்டும். (இதுவும் புரட்சிக்கு சாதமான சூழ் நிலையாகும்.)

(2) சர்வதேச நிலைமைகளை சூழல்களைப் பார்த்தால் எம்மைவிட எதிரிக்கே மிகச் சாதகமான சூழ்நிலைகள் காணப்படுகின்றன. (இதுமுன்னர் ஆராயப்பட்டுள்

இதன் விளைவாக:

(1) வாய்ப்பான பின்தளங்கள் பாதிப்படல்.
(2) நிதி ஆயுதக் கொள்வனவில் தடைகள்.
(3) எதிரியை சர்வதேச ரீதியில் வீழ்த்துவதில் பின்னடைவு என்பன தோன்றுகின்றன.

எதிர்ப் புரட்சியும், எதிர்ப் புரட்சிகர சக்திகளும் விடுதலை இயக்கம் என்ற போர்வையில் இயக்க வடிவத்தை பெற்றுவரும் போக்கு பாரிய அளவில் வளர்கிறது. இதனால் புரட்சிகர சக்திகள் இயக்கங்கள் அழித்தொழிக்கப்படலாம்

(4) மலையக மக்கள், முஸ்லிம் மக்கள் ஆகியோரது சுயேச்சையான ~~அ~~ அரசியல் வேலைத்திட்டங்களை எமது போராட்டத்துடன் எவ்வாறு இணைப்பது என்ற பிரச்ச

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(5) சிங்கள மக்களுக்கும் அரசிற்கும் இடையில் தோன்றும் முரண்பாடுகளை ஸ்தாபனப் படுத்தி வளர்த்தெடுப்பதில் உள்ள பிரச்சனை.

(6) <u>யுத்தப் பொருளாதாரம் சம்பந்தமாக</u>:-

அ. யுத்தத்தில் முழுத் தேசியத்தினதும் பொருளாதார ஒழுங்கமைப்பு மீள் அமைக்கப்பட வேண்டியிருக்கும்.

ஆ. இதன்போது பலவர்க்கங்கள் சமூகக் குழுக்கள் பொருளாதார கஸ்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும்.

இ. இதை எவ்வாறு நாம் முகங்கொடுக்கப் போகிறோம் என்ற பிரச்சனை.

(7) இயக்கங்கள் மத்தியிலான ஓர் ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்புவது சம்பந்தமான பிரச்சனை.

(8) பல இயக்கங்கள் ஆதிக்கத்தில் இருக்கும் சூழலில் சிவில் நிர்வாகத்தை எவ்வாறு கொண்டு நடத்துவது இதுவும் நாம் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சனையாகும்.

(9) புரட்சிகர சக்திகள் உட்கட்சிப் போராட்டத்தை தற்போது நிலவும் பாதக சாதக நிலைமைகள் எவ்வாறு முன்னெடுத்து பாட்டாளி வர்க்கத் தலைமையை உருவாக்குவது இதுவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நாம் முகம் கொடுக்கும் பிரச்சனையாகும்.

(10) மிகக்குறுகிய கால வெற்றியிலும் அந்நிய சக்திகளிலும் நம்பிக்கை கொண்டு அனைத்து விடுதலை இயக்கங்களும் செயற்பட்டு வந்தால் இன்றைய சர்வதேச சூழ்நிலையின் காரணமாகவும் இயக்க அக நிலையில் ஏற்பட்ட தாக்கம் காரணமாகவும் இன்றைய இயக்கங்கள் பொது நேரடிக்கு முகங் கொடுக்க முடியாமல் தடுமாறுகின்றன. அதாவது இது ஒரு வடிநிலைக் கட்டமாகும். தேசிய விடுதலைப் போராட்டத்தினூடாக வளர்ந்து வந்த புரட்சிகர சக்திகளை வடிகட்டும் கட்டமாகும். சிறு முதலாளித்துவ குணம்சங்கள் கொண்ட இன்றைய இயக்கங்கள் இதற்கும் அப்பால் வரலாற்றை இழுத்துச் செல்ல முடியாது என்பது நிருபணமாகி வருகிறது.

மார்க்சிச.லெனினிச கருத்துக்களால் ஆயுதபாணியாக்கப்பட்ட ஒரு புரட்சிகர ஸ்தாபனமே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்லும் இதுவே எமது பணியாகும்.

(11) பிரமாண்டமான அளவு நிதி ஆயுதத் தளவாடங்களின் தேவை.

(12) இந்திய மேலாதிக்கத்தின் பிடியிலிருந்து எவ்வாறு தந்திரமாக எம்மை கழற்றிக் கொள்வது சம்பந்தமான பிரச்சனை.

(13) இதுவரைகால யுத்த அனுபவங்களைத் தொகுத்து மக்கள் யுத்த பாதையை நடைமுறையூடாக விருத்தி செய்தல்.

(14) உடனடியாக தற்காப்பு நடவடிக்கைகளில் எவ்விதம் ஈடுபடுவது என்பது சம்பந்தமான பிரச்சனை.

(15) இடம் பெயர்ந்த எல்லைப்புற பிரதேச மக்களின் வாழ்க்கைப் பிரச்சனையை எவ்வாறு தீர்ப்பது சம்பந்தமான பிரச்சனை.

(16) இதுவரை காலம் நம்பிக்கை இழந்து நிற்கும் மக்களிடம் நாம் எவ்வாறு நம்பிக்கையை ஏற்படுத்தப் போகிறோம் என்ற பிரச்சனை.

**************************

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்